ந.க.எண் 7070/ 78/ அ3

வணிகவரி அலுவலர் அலுவலகம்

பொள்ளாச்சி (மேற்கு)

நாள் 11 .06. 2018

DR(AS)

**படிவம் -7**

**(பிரிவு 36)**

**வீடு ஏல விற்பனை அறிவிக்கை**

இதனால் அனைவருக்கும் தெரிவிப்பது என்னவென்றால், இதனடியில் குறிப்பிடப்பட்டுள்ள வீடு மற்றும் மனை இடம் திரு. கே. இராஜகோபால், க.எண் 85, ஆரோக்கியநாதர் வீதி, பொள்ளாச்சி என்பவர் அரசுக்கு செலுத்த வேண்டிய விற்பனை வரி பாக்கிக்காக கையகப்படுத்திய ,க.எண் 85,ஆரோக்கியநாதர் வீதி,பொள்ளாச்சி விலாசத்தில் உள்ள **வீட்டில் ஒன்பதில் ஒரு பங்கு** கீழ்கண்ட தேதியில் பகிரங்கமாய் ஏலம் போடப்படும் மேற்படி ஏலம் அதிகபட்ச தொகைக்குத்தான் விடப்படும்.

இடம் வணிகவரி அலுவலக வளாகம்,8,பாலக்காடு ரோடு, பொள்ளாச்சி

நாள் 10.07. 2018 முற்பகல் .11.00 மணியளவில்

அதுசமயம்,

1.ஏலம் கோருபவர் 15 சதவீதம் காப்புத்தொகை செலுத்த வேண்டும் . அவ்வாறு செலுத்துபவர் ஏலம் கோரிய 30 நாட்களுக்குள் மீதித் தொகையையும் செலுத்த வேண்டும்.செலுத்தத் தவறினால் காப்புத் தொகையை இழந்தவராவார்.

2. காப்புத்தொகை யை செலுத்தவில்லையாயினும் அன்றி மீதித் தொகையை 30 நாட்களுக்குள் செலுத்தாத பட்சத்தில் மேற்படி இடம் மற்றும் வீடு மறுஏலம், முன்னவரது செலவிலும் பொறுப்பிலும் போடப்படும்.

3. ஏலம் கோருபவர்கள் ஏலம் எடுப்பது தனக்காகவா அன்றி வேறு நபர்களுக்காகவா என்பதை முன்னதாகவே தெரிவிக்க வேண்டும். வேறு நபர்களுக்காக ஏலம் கோருபவர்கள் உரிய அத்தாட்சிக் கடிதம் கொடுத்த பின் ஏலம் கோர வேண்டும்.

4.பாக்கிதாரராவது அல்லது அவரைச்சார்ந்தவராவது அல்லது மேற்படி சொத்தில் உரிமை கொண்டாடுபவர்களாவது ஏல நாளுக்கு முந்தைய நாள் சூரிய அஸ்தமனத்திற்குள் பாக்கியை வட்டி முதலிய செலவுகளுடன் செலுத்தினாலொழிய ஏலம் நிறுத்தப்படமாட்டாது.

*5.வீடு மற்றும் நிலம் விற்பனை இணை ஆணையர்( வணி வரிகள்) கோவை அவர்களால்* உறுதி செய்யப்பட்டாலே இறுதியானது. ஊர்ஜிதம் செய்வதற்கான கால அவகாசம் 30 நாட்கள் அளிக்கப்படும். மேற்படி ஏல விற்பனையில் அதிருப்தி கொண்டால் மேல்முறையீடு செய்யவே அக்கால அளவு கொடுக்கப்படுகிறது.ஏல விற்பனை ஊர்ஜிதம் செய்தவுடன் நிலமோ அல்லது வீடோ ஏலம் எடுத்தவர் பெயருக்கு பதிவு செய்ய துணை ஆணையர்(வணிகவரிகள்) அவர்களின் முத்திரையுடன் சான்று வழங்கப்படும்.

6. ஏலம் விடப்படும் நிலத்தின்/வீட்டின் பரப்பிலோ அல்லது விவரத்திலோ தவறு ஏற்படின் அதற்கு அரசு பொறுப்பல்ல.

7. ஏலம் விடப்படும் நிலம்/வீடு ஏற்கனவே வில்லங்கத்தில் இருப்பின் ஏலம் எடுப்பவர் தமது சொந்தப்பொறுப்பில் அதை தீர்த்துக்கொள்ள வேண்டியது.

## சொத்து விபரம்

| வட்டம்/ கிராமம் / நிலுவைதாரரின் பெயர் | சொத்தின் விபரம் மற்றும் தோராய அளவு |
|---|---|
| பொள்ளாச்சி வட்டம்<br>பொள்ளாச்சி நகரம்<br>திரு. இராஜகோபால்,<br>களண் 85,ஆரோக்கிய நாதர் வீதி,<br>பொள்ளாச்சி .<br><br>வரி பாக்கி ரூ.25115/- | திருப்பூர் ரிடு, பொள்ளாச்சி சப்டி,சார்பதிவாளர் பொள்ளாச்சி புத்தகம்1,தொகுதி 442, பக்கம் 336 முதல் 348 முடிய,டாக்குமெண்ட் நெ 576/ 1928,கஷ்பா பொள்ளாச்சி டவுனில், டவுன் சர்வே 4,டி.எஸ் நெ1083, க எண் 85,ஆரோக்கியநாதர் வீதி,பொள்ளாச்சியில் உள்ள வீட்டில் ஒன்பதில் ஒரு பங்கு. |

இடம். பொள்ளாச்சி

நாள் 11 .06. 2018

வணிகவரி அலுவலர்

பொள்ளாச்சி (மேற்கு)

பெறுநர்

தகவல் பலகை

நகல்

1). திரு. இராஜகோபால், 38-ஏ,சர்க்கரை செட்டியார் வீதி,உப்பிலிபாளையம்,கோயமுத்தூர் - 15

2). இணை ஆணையர் (வவ),கோவை அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது

3). துணை ஆணையர்(வவ) பொள்ளாச்சி அவர்களுக்கு தகவலின் பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது.

4). கோட்டாட்சியர்,பொள்ளாச்சி அவர்களுக்கு பரந்தவிளம்பரம் செய்யும்பொருட்டுபணிந்தனுப்பப்படுகிறது.

5). உதவி ஆணையர்(வவ) , பொள்ளாச்சி (ஊரகம்),மற்றும் (கிழக்கு),உடுமலை (வடக்கு) மற்றும் (தெற்கு) அவர்களுக்கு பரந்த விளம்பரம் செய்யும் பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது.

6). வட்டாட்சியர்,பொள்ளாச்சி அவர்களுக்கு பரந்த விளம்பரம் செய்யும் பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது.

7). சார்பதிவாளர்,பொள்ளாச்சி அவர்களுக்கு பரந்த விளம்பரம்செய்யும்பொருட்டுபணிந்தனுப்பப்படுகிறது.

8). ஆணையாளர், பொள்ளாச்சி நகராட்சி,அவர்களுக்கு பரந்த விளம்பரம்செய்யும் பொருட்டு

9). ஆணையாளர், பொள்ளாச்சி (வடக்கு),மற்றும் (தெற்கு),ஊராட்சி ஒன்றியம்,அவர்களுக்கு பரந்த விளம்பரம் செய்யும் பொருட்டு அனுப்பப்படுகிறது.

10) கிராம நிர்வாக அலுவலர், பொள்ளாச்சி நகரம்,அவர்களுக்கு பரந்த விளம்பரம் செய்யும் பொருட்டு அனுப்பப்படுகிறது.

11). ஆய்வாளர்,கிழக்கு காவல் நிலையம், பொள்ளாச்சி அவர்களுக்கு தகவலின் பொருட்டு

12). கதவு எண் 85, ஆரோக்கிய நாதர் வீதி, பொள்ளாச்சி வீட்டில் ஒட்டி சார்பு செய்ய.

13). இணை ஆணையர் (வவ)(கணினி),கிரீம்ஸ் சாலை, சென்னை-6 அவர்களுக்கு இணைய தளத்தில் வெளியிடும் பொருட்டு பணிந்தனுப்பப்படுகிறது.